DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE IVth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
UDUMALPET

**Sessions Case No : 126/2016**

Deposition of Witness for : **P.W.28 - சோமசுந்தரம்**

**எதிரிகள் ஆஜர்**

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of **20.02.2026**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

இந்த வழக்கில் சாட்சிகளான முருகானந்தம், வீரக்குமார், ஆண்டமுத்து, உதயகுமார், செந்தில் நாதன், சுப்பிரமணி ஆகியோர்கள் இறந்துபோன பாலாஜி என்ற பாலசுப்பிரமணியத்தின் உறவினர்கள் என்றால் சரிதான். வாகன தணிக்கை நாங்கள் செய்யும் போது எந்த வாகனத்தில் எந்தெந்த காவலர்களுடன் வந்தேன் என்றால் சாட்சி காவல் நிலைய வாகனத்தில் வந்தேன், என்னுடன் உதவி ஆய்வாளர் விஜயகுமார் மற்றும் காவலர்களுடன் வந்தேன். அப்போது எத்தனை காவலர்கள் உடன் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் வாகன தணிக்கையை 07.02.2015 அன்று காலை 5 மணிக்கு ஆரம்பித்து காலை 7 மணி வரை வாகன தணிக்கை செய்தேன். எத்தனை வாகனத்தை தணிக்கை செய்தேன் என்ற விவரத்தை வழக்கு கோப்பில் குறிப்பிடவில்லை. வாகன தணிக்கை சம்பந்தமாக வேறு எந்த வாகனத்தின் மீதும் குற்ற வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சிகள் வீரக்குமார், உதயகுமாரை அன்றைய தினம் காலை 6 மணிக்கு பார்த்தேன். 1ம் எதிரியின்

ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் விஜயகுமார் தட்டச்சு செய்தார். மேற்படி விஜயகுமார் தட்டச்சு செய்தார் என்பதற்கு குறிப்பு எதுவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த பிறகு எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுத்தோம் என்றால் உதவி ஆய்வாளர் எடுத்தார், அவர் எங்கு எடுத்தார் என்று எனக்கு தெரியாது. எங்கு பிரிண்ட் அவுட் எடுத்தோம் என்ற விவரம் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூல பிரிண்ட் அவுட் எடுத்தது சம்பந்தமாக இந்திய சாட்சிய சட்டப்படி பிரிவு 65 b சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். துங்காவி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் வீடு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், துங்காவி ஊராட்சி மன்ற அலுவலகம், கால்நடை மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடம் உள்ளது என்றால் அது பற்றி விசாரித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. 1வது எதிரியிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அரசு அலுவலர்கள் யாரையும் அழைத்து சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நான் வாகன தணிக்கையை துங்காவி 4 ரோட்டில் மேற்கொண்டேன். மேற்படி 4 ரோடு உடுமலைபேட்டை – தாராபுரம் செல்லும் சாலையில் உள்ளது. துங்காவி கிராமத்தை தான்டி தான் மேற்படி 4 ரோடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வாய்க்கால், அந்த பகுதி சிமெண்ட் மற்றும் மண் கலந்த தரைப்பகுதி. மேற்படி இடத்தில் சின்ன வாய்க்கால் மற்றும் பெரிய வாய்க்கால் என்று இரண்டு வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். சின்ன வாய்க்கால் கிழமேலாக செல்கிறது. சம்பவ சமயத்தில் வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. பக்கத்து தோட்டத்திற்கும் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். 1வது எதிரியை கைது செய்யும் போது 1வது எதிரிக்கு காயம் ஏற்பட்டது, அதை பற்றி வழக்கு கோப்பில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் வீரக்குமார், உதயகுமார்

ஆகியோர்கள் யாரை பார்ப்பதற்கு சென்றதாக என்னுடைய புலன் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் வேலைக்கு செல்லும் போது தணிக்கை இடத்திற்கு வந்ததாக சொன்னார் என்று சாட்சி கூறுகிறார். வாகன தணிக்கையின் போது 4 ரோட்டில் எத்தனை வாகனங்கள் நின்றன என்றால் சாட்சி எவ்வித வாகனமும் இல்லை என்று கூறுகிறார். நான் வாகன தணிக்கையை செய்யும் போது நின்ற சாலை கிழமேல் சாலையா, தென்வடல் சாலையா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் வாகன தணிக்கையை செய்த இடத்திற்கு Landmark எதுவும் உண்டா என்றால் 4 ரோடு என்று சாட்சி கூறுகிறார். 07.02.2015 அன்று நான் வாகன தணிக்கை 4 ரோட்டில் மேற்கொள்ளவில்லை என்றும், அப்போது 1வது எதிரியை கைது செய்யவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் அவரிடம் பெறவில்லை என்றும், அதில் குறிப்பிட்டுள்ள சாட்சியை நான் பார்க்கவே இல்லை என்றும், கைபற்றுதல் மகஜர் தயாரித்து சான்று பொருள் கைப்பற்றவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து மேற்படி ஆவணங்களை பொய்யாக தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருந்தால் அரசு அலுவலரிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றும், பொய்யாக தயாரித்த காரணத்தினால் தான் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. பொய்யான ஒப்புதல் வாக்குமூலம், கைபற்றுதல் மகஜர் என்ற காரணத்தினால் தான் இந்த வழக்கின் இறந்து போனவரின் உறவினர்களை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரியான முறையில் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் பின்னிட்டு வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கைபற்றிய அலைபேசி எண்ணுடைய நிறுவனத்தின் நோடல் ஆபிசரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணையில் காலத்தை நான் தான் நிரப்பினேன். இந்த வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும்

**இல்லை என்றால் சரியல்ல.**

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.20 15:07:06 +0530

IV th Additional District and Sessions Judge,
Udumalpet.